Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பூலுவபட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு.ம.ரெங்கசாமி

ந.க.எண்.243/2021 நாள்.26.10.2021

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம்–பூலுவபட்டி பேரூராட்சி க.ச.எண்.149/3A-ல் 1.88 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது–நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல்–தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.18 ந.நி.(ம) கு.வ. துறை நாள்.17.10.2020.
2. கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக இணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்ந.க.எண்.3150/21/உதிகு. ம.வ./கோ.உ.தி.கு எண்.237/2021 திட்ட அனுமதி எண்.317/2021 நாள்.27.08.2021.
3. பூலுவபட்டி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.41/21, நாள்.30.09.2021.
4. மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்

உத்தரவு : –

கோயம்புத்தூர் மாவட்டம், பூலுவபட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, க.ச.எண்.149/3A–ல் 1.88 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள மனைப்பிரிவு குறித்து பார்வை 2–ல் காணும் இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணையில் இம்மனைப்பிரிவிற்கு ம.வ./கோ.உ.தி.கு எண்.237/2021–ன்படி தொழில்நுட்ப அனுமதியும், 317/2021–ன்படி திட்ட அனுமதியும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை 2–ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவு உரிமையாளரால் தார்சாலை, வடிகால், குடிநீர் குழாய் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் ரூ.14,000/–, காலியிட வரி ரூ.36,800/– மற்றும் தெருவிளக்கு வசதிக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ரூ.33690/–, செலான் எண்.411/2021–2022, நாள்.25.10.2021–ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்,
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு இரா.வாழவந்தான், பி.இ.,
திட்ட அனுமதி
நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். 3150/2021/உ திரு நாள்: 27.08.2021

தி.அ.எண். 237 /2021

உள்ளாட்சியின் பெயர்: பூலுவம்பட்டி பேரூராட்சி

பொருள் : **திட்ட அனுமதி – மலையிடப்பாதுகாப்பு பகுதி குடியிருப்பு மனைப்பிரிவு** - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் - கோவை மாவட்டம் - பேரூர் வட்டம் - பூலுவம்பட்டி பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண். 149/3A –ல் 1.88 ஏக்கர் (7600.00 ச.மீ) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் C.Veerakumar & V.Parimaladevi அவர்கள் விண்ணப்பம் நாள். 08.04.2021
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் : 26.04.2021 (சாலையமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது)
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 19766/2020போ, நாள் 24.12.2020
4. மனுதாரர் C.Veerakumar & V.Parimaladevi சாலை ஒப்படைப்பு செய்து தானப்பத்திரம் பெறப்பட்ட நாள் 19.07.2021
5. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (Head of Department) சென்னை அவர்கள் தடையின்மைச் சான்று K.Dis.No.TS4/10226/2020 நாள் 17.09.2020
6. உதவி இயக்குநர், புவியியல் மற்றும் கனிமவளத்துறை, கோயம்புத்தூர் அவர்கள் தடையின்மை சான்று கடிதம் எண். K.Dis.No.834/Mines/2020 நாள் 21.11.2020
7. செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, கோயம்புத்தூர் அவர்கள் கடிதம் எண். இ/734/2021 நாள் 18.08.2020
8. வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தடையின்மை சான்று மு.மு,எண். 3880/2020/அ1 நாள் 09.12.2020
9. அரசாணை எண் 138 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.06.2004.
10. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020.
11. அரசாணை எண் 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2017

12. அரசாணை எண் 141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள் 23.09.2020.
13. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(1) நாள் 09.12.2020.
14. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 30.08.2017.
15. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 13686/2017/LA1/ நாள் 08.09.2017.
16. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண். 33 நாள் 04.11.2020.
17. அபிவிருத்திக் கட்டணம் செலுத்தி விண்ணப்பம் பெறப்பட்ட நாள். 10.08.2021

உத்தரவு:

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 26.04.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 3ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண் 5192/2021 நாள் 08.07.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

1. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/உ.தி.கு.எண்- **237/2021** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும் **திட்ட அனுமதி எண் 317 /2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைப்படங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைகாக இத்துடன் அனுப்பப்படுகிறது.

2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 9(ஆ)-ன்படி அவ்வாணையில் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. உத்தேச மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் தகுதிக்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

எனவே மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் பூலுவபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.11, க.ச. எண்.149/3A-ல் 1.88 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு, பார்வை 1ல் கண்டுள்ள, இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 முடிய உள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும், 1 முதல் 13 முடிய உள்ள மனைப்பிரிவு பொது நிபந்தனைகளுக்குட்பட்டும், மனைப்பிரிவு அங்கீகார வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அங்கீகாரம் பெறப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் மனையிடத்தில் பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியும் வகையில் 6 X 4 அளவுள்ள நிரந்தர அறிவிப்பு பலகை வைக்கப்படல் வேண்டும்.

2. பார்வை 3—ல் காணும் விவரப்படி இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் உத்திரவுடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்படுவதாக மனுதாரரால் மதுக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ரூ.100/—மதிப்புள்ள முத்திரைத்தாளில் நிபந்தனை பத்திரம் பதிவு செய்யப்பட்டு பேரூராட்சிக்கு இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்படை செய்யப்படவேண்டும். மேலும் மேற்படி மனைப்பிரிவில் மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.

3. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யும் பொருட்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரயம் செய்யப்படும் பொழுது , கிரயப்பத்திரத்தின் ஒரு அங்கமாக வரைபட நகலையும் இணைத்து கிரயம் செய்து கொடுக்கப்படவேண்டும்.

. 3

4. மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளபடியே மனைகள் விற்கப்படவேண்டும். விதிமுறைகளுக்கு முரணாக ஒரு மனையிடத்தை பகுதியாக பிரித்து விற்பனை செய்யக் கூடாது.

5. இம்மனைப்பிரிவில் மனுதாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப்பணிகளில் குறைபாடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் மனைப்பிரிவு உரிமையாளர் நிபந்தனைகள் ஏதும் இன்றி தனது சொந்த செலவில் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவு உரிமைதாரர் இவ்வுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், விதிமுறைகளுக்கும் முரணாக செயல்பட்டால் இவ்வுத்தரவு எவ்வித முன்னறிவிப்புமின்றி செயல் அலுவலரால் ரத்து செய்யப்படும்.

செயல் அலுவலர்
பூலுவபட்டி தேர்வுநிலை பேரூராட்சி
கோயம்புத்தூர் – 641101.

26/10/21

இணைப்பு

1) முத்திரையிட்ட வரைபடம்
2) நிபந்தனை படிவம்

பெறுநர்

திரு.சி.வீரக்குமார் மற்றும் திருமதி.வி.பரிமளாதேவி
என்.2/660–கணக்கம்பாளையம்
திருப்பூர் – 641 666.

நகல்

1) இணை இயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், தொண்டாமுத்தூர்.
3) தலைவர், தமிழ்நாடு நில விற்பனை ஒழுங்கு முறை ஆணையம், எழும்பூர், சென்னை.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate